**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**
**முன்னிலை:– திருமதி. ஆ. சுபஸ்ரீ, எல்.எல்.எம்.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திருப்பூர்.**

**2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீ விசுவாவசு வருடம், ஐப்பசி திங்கள் 28 ம் நாள்**

<u>இடைக்கால மனு எண். 551/2023</u>
இன்
<u>அசல் வழக்கு எண். 363/2019</u>

1. G.வினோத்குமார்
2. M.வசந்தி
3. M.சாந்தி
4. P.ரங்கம்மாள்
5. P.ரங்கம்மாள்
6. R.ஜமுனா
7. P. பாப்பம்மாள்
8. C. மகாலட்சுமி
9. S. சின்னம்மாள் ..மனுதாரர்கள்/எதிர்நோக்கும் 3 முதல் 11 பிரதிவாதிகள்

/எதிர்/

1. தங்கமணி (இறப்பு)
2. வெங்கடாசலம் ..எதிர்மனுதாரர்கள்/வாதிகள்
3. சரசு
4. சரவணன்
5. சின்னம்மாள்
6. பாலசுந்தரம் ..எதிர்மனுதாரர்கள்/ 3 முதல் 6 பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 04.11.2025ம் தேதியன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள்/எதிர்நோக்கும் பிரதிவாதிகள் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.S.ஜாக்குலின் அவர்கள் முன்னிலையாகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.ஆனந்தன் அவர்கள் முன்னிலையாகியும், 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.R.சோமசுந்தரம் அவர்கள்

முன்னிலையாகியும், 6ம் எதிர்மனுதாரர் நீக்கறவு செய்யப்பட்டும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், மனு ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆய்வில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

**உத்தரவு**

1908 ம் ஆண்டு உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 1 விதி 10 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் :**

**2.1** அசல் வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் தனிசுவாதீனம் கோரி 1,2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல்செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு நிலுவையில் உள்ள விபரம் மனுதாரர்களுக்கு தற்போது தான் தெரியவந்தது. பல ஆண்டு காலமாக மனுதாரர்களின் முன்னோர்கள் க.ச.எண்.458, 458/1 முதல் 458/6 பிரிபடாத சொத்தில் சுவாதீனத்திலும் அனுபவத்திலும் கூட்டு பங்குதாரர்களாக இருந்து வந்துள்ளார்கள்.

**2.2** மேற்படி சொத்தில் மனுதாரர்கள் எவ்வித இடையூறும் இன்றி பொது வண்டிப்பாதை உரிமை உட்பட தொடர் சுவாதீனத்திலும் அனுபவத்திலும் இருந்து வருகிறார்கள். கடந்த இரண்டு ஆண்டு காலமாக எதிர்மனுதாரர்களுடன் மனுதாரர்களுக்கு நல்ல உறவு இல்லை. எனவே அவசியத்தரப்பினர்களான மனுதாரர்களை வேண்டுமென்றே விட்டு விட்டு எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். அசல் வழக்கின் தீர்விற்கு மனுதாரர்கள் அவசியத்தரப்பினர்கள் என்பதால் மனுவை அனுமதிக்க வேண்டுமென்று மனுதாரர்கள் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :**

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான ஒன்று. அது

சட்டப்படியும், பொருண்மைப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் அசல் வழக்கிற்கு தொடர்பற்றவர்கள். மனுதாரர்களின் கூற்றை நிரூபிப்பதற்கு எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை. மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள க.ச.எண். 458/1 முதல் கக.ச.458/6 வரையிலான காலைகளுக்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லை. கடந்த 29.08.1984ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணப்படி தாவா சொத்து ஒரு நடராஜன் மற்றும் ரங்கசாமி ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது. அசல் வழக்கின் தீர்வை காலதாமதப்படுத்தும் நோக்கத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனுவை தள்ளுபடி செய்யவேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4**. 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

**5.** மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், " மனுதாரர்கள் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்".

**7. <u>தீர்வு</u> :–**

**7.1** மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், மனுதார்கள் மற்றும் எதிர்மனுதாரர்களின் சொத்துக்கள் பூர்வீகவகையில் பொதுவில் இருவருக்கும் பாத்தியப்பட்டவை என்பதால் அசல் வழக்கின் தீர்வுக்கு மனுதாரர்கள் அவசியத்தரப்பினர் என்றும், எனவே மனுவை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

**7.2** எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், மனுதாரர்களின் சொத்திற்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றும், மனுதாரரகள் மனுவில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபிப்பதற்கு எவ்வித

ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

**7.3** இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது மண்ணரை கிராமம், க.ச.458ல் உள்ள 5754 சதுரடி இடம் குறித்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7.4** மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில் க.ச.எண்.458, 458/1 முதல் 458/6 வரையிலான காலைகளில் மனுதாரர்களும் கூட்டு பங்குதாரர்கள் என்பதால் அசல் வழக்கின் தீர்விற்கு அவர்கள் அவசியத்தரப்பினர்கள் என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால், மண்ணரை கிராமம், க.ச.எண்.458ல் மனுதாரர்களுக்கு சொத்துக்கள் உள்ளது என்பதற்கும் மேற்படி காலைகளில் அவர்கள் கூட்டு பங்குதாரர்களாக உள்ளார்கள் என்பதற்கும் மனுதாரர்கள் தரப்பில் எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை.

**7.5** மனுதாரர்களுக்கு மண்ணரை கிராமம் க.ச.எண்.458 காலையில் பூமிகள் பாகம் பிரிக்கப்படாமல் பொதுவாக உள்ளதற்கு எவ்வித ஆவணத்தையும் தாக்கல் செய்யாததால் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்**, மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

A SUBASHRI Digitally signed by A SUBASHRI Date: 2025.11.14 17:35:18 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.

**<u>இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :</u>** இல்லை.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.11.14 17:35:25 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.